மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் : எந்த மாதம் ?

திரு. செ. முத்துசாமி : செப்டம்பர் மாதம்தான். இரவு லாரியில் அடிபட்டு, கை ஒடிந்து, ஆஸ்பத்திரியில் அட்மிட் செய்திருக்கிறார்கள். இரவு சிகிச்சை அளிக்கப்படவில்லை. 30, 40 ஆசிரியர்கள் இருந்திருக்கிறார்கள். காலையில், எக்ஸ்ரே எடுக்காமல் ஒன்றும் செய்ய முடியாது, இங்கே எக்ஸ்ரே எடுக்க வழியில்லை, ஆகவே நீங்கள் எடுத்துச் செல்லுங்கள் என்று 11 மணிக்குப் பிறகு டிஸ்சார்ஜ் செய்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லி, தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் : உறுப்பினர் அவர்கள் கூறியது பரிசிலிக்கப்பட்டு, உடனே நடவடிக்கை எடுக்கப்படும்.

Reimbursement of Medical Expenses to Retired Government Officials.

* 87 *Q.*—THIRU E. S. VENKATESAN: Will the Hon. the Minister for Health be pleased to state whether there is any proposal with the Government to remove the present ceiling of Rs. 200 for retired Government Officials and to reimburse the whole medical expenses, as in the case of Government Officials in service?

ஓய்வுபெற்ற அரசு அலுவலர்களுக்கு மருந்து செலவு ஈடு செய்தல்

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

ஓய்வு பெற்ற அலுவலர்களுக்கு இப்போதுள்ள ரூ. 200 உச்சவரம்பை ரத்து செய்து, பணிபுரியும் அலுவலர்களுக்குக் கொடுப்பது போல், மருந்து வாங்க செலவு செய்கின்ற பூராத் தொகையையும் ஈடு செய்யும் Re'mburse செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் : இல்லை

(முற்பகல் 11-10)

திரு. ஈ. எஸ். வெக்கடேசன்: மருந்து வாங்கும் தொகையை ஈடு செய்ய எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் ஓய்வு பெற்றவர்களுக்கு கஷ்டமாயிருப்பதால் அவர்களுடைய மருந்து வசதிக்காக மாதா மாதம் ஒரு குறிப்பிட்ட தொகையைக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

1978 செப்டம்பர் 13]

மாண்புமிகு திரு. ஆர். செளந்தரராஜன் : அரசாணை எண் 1629, தேதி 22—6—1971-ல் ஓய்வு பெற்ற அரசு அலுவலர்கள், தாங்கள் ஓய்வு பெற்ற காலத்திலிருந்து தங்களுடைய மருந்துச் செலவுகளை ஈடு செய்ய ஒரு வருடத்திற்கு ஒரு மாத ஓய்வூதியமோ அல்லது 200 ரூபாயோ அதில் எது குறைந்ததோ அதைப் பெறலாம் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : மாதா மாதம் ரீ-இம்பர்ஸ்மென்ட் தொகையை பென்ஷனோடு சேர்த்துக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். செளந்தரராஜன்: இந்த யோசனை ஏற்று பரிசீலிக்கப்படும்.

திரு. க. மீனுட்சிசுந்தரம் : ஓய்வு பெற்றவர்கள், ஓய்வு பெருதவர்கள் அனைவருக்குமே மருத்துவப் படியை மாதந்தோறும் அளிக்க வேண்டும் என்று பேரறிஞர் அண்ணு அவர்கள் விருப்பத்தைத் தெரிவித்திருந்தார்கள். எங்களுடைய போதாத காலம், அவர்கள் மறைந்துவிட்டார்கள், அந்த ஒரு எண்ணத்தை இங்கே செயல்படுத்துகிற வகையிலே நம்முடைய மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், அனைத்து ஊழியர்களுக்கும் மாதந் தோறும் மருத்துவப் படியை அளிக்கும் திட்டத்தைப் பரிந்துரை செய் வார்களா ?

மாண்புமிகு திரு. ஆர். செளந்தரராஜன் : இந்தத் திட்டத்தைப் பரிந் துரை செய்ய ஆவன நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இந்த ரீ-இம்பர்ஸ்மென்ட் Re mburs me)(tn ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை அளவில்தான் கிடைக்கிறதே தவிர, விண்ணப்பிக்கிற எல்லா அலுவலர்களுக்கும், ஆசிரியர் களுக்கும் கிடைக்கவில்லை என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். செளந்தரராஜன் : குறிப்பாக அப்படிப்பட்ட குறை பாடுகள் இருப்பின், எடுத்துச்சொன்னுல் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. செ. முத்துசாமி : இப்போது உள்ளாட்சித் துறையிலே பணியாற்றக் கூடிய ஆசிரியர்கள் மருந்துச் செலவுக்காக வருடத்திற்கு 300 ரூபாய் வரையில் பெறலாம் என்றிருந்த வரம்பை நீக்கி, ஆர்.டி.எல்.எ., டிப்பார்ட்மென்ட் மருத்துவத் துறையோடு கலந்து ஒரு உத்தரவு போட்டது. ஆனுல் அந்த உத்தரவு உள்ளாட்சித் துறையில் போடப்பட்டதே தவிர, மருத்துவத் துறை யிலிருந்து வரவில்லை என்பதற்காக, அந்த உத்தரவு போட்டு ஓராண்டுக் காலம்

ஆகியும், உள்ளாட்சித் துறையில் பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கு இந்த மருத்துவச் சலுகையை அளிக்காமல் இருக்கிறார்கள். இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்ன் கவனத்திற்குக் கொண்டு வந்து அந்த உத்தரவை அமுல்படுத்த உடனடியாக மருத்துவத் துறையிலேயிருந்து உத்தரவிடப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன்: மூலக் கேள்வி ஓய்வு பெற்ற அலுவலர்களுக்கு மருத்துவ வசதியை அளிப்பது பற்றி. இது குறித்து தனிக் கேள்வியைப் போட்டால், விரிவான பதிலைச் சொல்லுகிறேன்.

திரு. பி. ஆர். தாமஸ் : இந்தச் சலுகையானது தனியார் பள்ளிகளில் பணி யாற்றும் ஆசிரியர்களுக்கும் வழங்கப்படுகிறதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் : அரசுத் துறையிலே பணியாற்றி யவர்களுக்கு வழங்கப்படுகிறது.

Examination of Out-Patients.

* 88 *Q*.—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether any target has been fixed for a Doctor; as regards the number of out-patients to be examined and prescribed medicines; and

(*b*) if so, the details thereof?

புற நோயாளிகளை பரிசோதனை செய்தல்.

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) புற நோயாளிகளை பரிசோதனை செய்து மருந்து கொடுப்பதில் ஒரு டாக்டர் எத்தனை நோயாளிகளைப் பார்த்து மருந்து எழுதிக் கொடுக்கவேண்டு மென்று குறியீடு ஏதும் இருக்கிறதா ?

(இ) ஆமெனில், அது யாது ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கிடமில்லை.

திரு எம். சங்கரலிங்கம் : அரசு மருத்துவ மனைகளில் புற நோயாளிகள் ஆயிரக்கணக்கில் வந்து சேர்கிறபோது, அங்கே இரண்டு, மூன்று டாக்டர்கள் இருந்து அங்கே வருகிறவர்களைத் திரும்பிக் கூடப் பார்க்காமல், அவர்கள்